ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# சிறிய திருமடல்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# சிறிய திருமடல்

## தனியன்

**முள்ளிச் செழுமலரோ தாரான் முளைமதியம் ⋆**
**கொள்ளிக்கென் உள்ளம் கொதியாமே ⋆**
**வள்ளல் திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியை வெட்டி ⋆**
**மருவாளன் தந்தான் மடல்**

‡ காரார் வரைக் கொங்கை கண்ணார் கடல் உடுக்கை ⋆
சீரார் சுடர்ச் சுட்டி செங்கலுழிப் பேராற்று ⋆
பேரார மார்பின் பெருமா மழைக் கூந்தல் ⋆
நீரார வேலி நிலமங்கை என்னும் ⋆
இப் பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே ‖ **1** ‖

அம்மூன்றும்
ஆராயில் தானே அறம் பொருள் இன்பம் என்று ⋆
ஆரார் இவற்றின் இடை அதனை எய்துவார் ⋆
சீரார் இரு கலையும் எய்துவர் ‖ **2** ‖

சிக்கெனமற்று
ஆரானும் உண்டென்பார் என்பது தான் அதுவும் ⋆
ஓராமை அன்றே உலகத்தார் சொல்லும் சொல் ⋆
ஓராமை ஆமாறது உரைக்கேன் கேளாமே ⋆
காரார் புரவி ஏழ் பூண்ட தனி ஆழி ⋆

தேரார் நிறை கதிரோன் மண்டலத்தைக் கீண்டு புக்கு ⋆
ஆரா அமுதம் அங்கெய்தி ‖ **3** ‖

அதில் நின்றும்
வாராதொழிவதொன்றுண்டே ⋆
அதுநிற்க ஏரார் முயல் விட்டுக் காக்கைப் பின் போவதே ⋆
ஏரார் இள முலையீர் ! என்தனக் குற்றதுதான் ⋆
காரார் குழல் எடுத்துக் கட்டி ‖ **4** ‖

கதிர் முலையை
வாரார வீக்கி மணிமேகலை திருத்தி ⋆
ஆரார் அயில் வேற்கண் அஞ்சனத்தின் நீறணிந்து ⋆
சீரார் செழும் பந்து கொண்டடியா நின்றேன் நான் ⋆
நீரார் கமலம் போல் செங்கண்மால் என்றொருவன் ⋆
பாரோர்கள் எல்லாம் மகிழப் பறை கறங்க ⋆
சீரார் குடம் இரண்டேந்தி ‖ **5** ‖

செழுந் தெருவே
ஆரார் எனச் சொல்லி ஆடும் அது கண்டு ⋆
ஏரார் இள முலையார் என்னையரும் எல்லாரும் ⋆
வாராயோ என்றார்க்குச் சென்றேன் என் வல் வினையால் ⋆
காரார் மணி நிறமும் கை வளையும் காணேன் நான் ⋆
ஆரானும் சொல்லிற்றும் கொள்ளேன் ‖ **6** ‖

அறிவழிந்து
தீரா உடம்பொடு பேதுறுவேன் கண்டிரங்கி ⋆
ஏரார் கிளிக் கிளவி எம்மனை தான் வந்தென்னை ⋆
சீரார் செழும் புழுதிக் காப்பிட்டு ‖ **7** ‖

செங்குறிஞ்சித்
தாரார் நறுமாலை சாத்தற்கு ⋆
தான் பின்னும் நேராதன ஒன்று நேர்ந்தாள் ‖ **8** ‖

அதனாலும்
தீராதென் சிந்தை நோய் தீராதென் பேதுறவு ⋆
வாராது மாமை அது கண்டு மற்றாங்கே ⋆
ஆரானும் மூதறியும் அம்மனைமார் சொல்லுவார் ⋆
பாரோர் சொலப்படும் கட்டுப் படுத்திரேல் ⋆
ஆரானும் மெய்ப்படுவன் என்றார் ‖ **9** ‖

அது கேட்டுக்
காரார் குழல் கொண்டை கட்டுவிச்சி கட்டேறி ⋆
சீரார் சுளகில் சிலநெல் பிடித்தெறியா ⋆
வேரா விதிர் விதிரா மெய் சிலிராக் கை மோவா ⋆
பேராயிரம் உடையான் என்றாள் ‖ **10** ‖

பேர்த்தேயும்
காரார் திருமேனி காட்டினாள் ⋆
கையதுவும் சீரார் வலம்புரியே என்றாள் ‖ **11** ‖

திருத் துழாய்த்
தாரார் நறுமாலை கட்டுரைத்தாள் கட்டுரையா ⋆
நீர் ஏதும் அஞ்சேன்மின் ! நும்மகளை நோய் செய்தான் ⋆
ஆரானும் அல்லன் அறிந்தேன் அவனை நான் ⋆
கூரார் வேற்கண்ணீர் உமக்கறியக் கூறுகேனோ ⋆
ஆரால் இவ்வையம் அடி அளப்புண்டதுதான் ⋆
ஆரால் இலங்கை பொடி பொடியா வீழ்ந்தது ⋆
மற்று ஆராலே கன்மாரி காத்ததுதான் ‖ **12** ‖

ஆழி நீர்
ஆரால் கடைந்திடப் பட்டது ⋆
அவன் காண்மின் ஊரா நிரை மேய்த்துலகெல்லாம் உண்டுமிழ்ந்தும் ⋆
ஆராத தன்மையனாய் ஆங்கொருநாள் ஆய்ப்பாடி ⋆
சீரார் கலை அல்குல் சீரடிச் செந்துவர் வாய் ⋆
வாரார் வனமுலையாள் மத்தாரப் பற்றிக் கொண்டு ⋆
ஏரார் இடை நோவ எத்தனையோர் போதுமாய் ⋆
சீரார் தயிர் கடைந்து வெண்ணை திரண்டதனை ⋆
வேரார் நுதல் மடவாள் வேறோர் கலத்திட்டு ⋆
நாரார் உறி ஏற்றி நன்கமைய வைத்ததனை ⋆
போரார் வேற்கண் மடவாள் போந்தனையும் பொய் உறக்கம் ⋆
ஓராதவன் போல் உறங்கி அறிவுற்று ⋆
தாரார் தடம் தோள்கள் உள் அளவும் கை நீட்டி ⋆
ஆராத வெண்ணை விழுங்கி ‖ **13** ‖

அருகிருந்த
மோரார் குடம் உருட்டி முன் கிடந்த தானத்தே ⋆
ஓராதவன் போல் கிடந்தானைக் கண்டவளும் ⋆
வாராத் தான் வைத்தது காணாள் ‖ **14** ‖

வயிறடித்திங்
காரார் புகுதுவார் ஐயர் இவர் அல்லால் ⋆
நீராம் இது செய்தீர் என்றோர் நெடும் கயிற்றால் ⋆
ஊரார்கள் எல்லாரும் காண உரலோடே ⋆
தீரா வெகுளியளாய்ச் சிக்கென ஆர்த்தடிப்ப ⋆
ஆரா வயிற்றினோடாற்றாதான் ‖ **15** ‖

அன்றியும்
நீரார் நெடும் கயத்தைச் சென்றலைக்க நின்றுரப்பி ⋆
ஓராயிரம் பண வெம் கோவியல் நாகத்தை ⋆
வாராய் எனக்கென்று மற்றதன் மத்தகத்து ⋆
சீரார் திருவடியால் பாய்ந்தான் ॥ **16** ॥

தன் சீதைக்கு
நேராவன் என்றோர் நிசாசரிதான் வந்தாளை ⋆
கூரார்ந்த வாளால் கொடி மூக்கும் காதிரண்டும் ⋆
ஈரா விடுத்தவட்கு மூத்தோனை ॥ **17** ॥

வெந்நரகம்
சேரா வகையே சிலை குனித்தான் ⋆
செந்துவர் வாய் வாரார் வன முலையாள் வைதேவி காரணமா ⋆
ஏரார் தடந் தோள் இராவணனை ॥ **18** ॥

ஈரைந்து
சீரார் சிரம் அறுத்துச் செற்றுகந்த செங்கண் மால் ⋆
போரார் நெடு வேலோன் பொன் பெயரோன் ஆகத்தை ⋆
கூரார்ந்த வள் உகிரால் கீண்டு ॥ **19** ॥

குடல் மாலை
சீரார் திருமார்பின் மேல் கட்டி ⋆
செங்குருதி சோராக் கிடந்தானைக் குங்குமத் தோள் கொட்டி ⋆
ஆரா எழுந்தான் அரி உருவாய் ॥ **20** ॥

அன்றியும்
பேர் வாமனனாகிய காலத்து ⋆

மூ அடி மண் தாராய் எனக்கென்று வேண்டிச் சலத்தினால் ⋆
நீர் ஏற்றுலகெல்லாம் நின்றளந்தான் மாவலியை ‖ **21** ‖

ஆராத போரில் அசுரர்களும் தானுமாய் ⋆
காரார் வரை நட்டு நாகம் கயிறாக ⋆
பேராமல் தாங்கிக் கடைந்தான் ‖ **22** ‖

திருத் துழாய்த்
தாரார்ந்த மார்வன் தட மால் வரை போலும் ⋆
போரானை பொய்கைவாய்க் கோட்பட்டு நின்றலறி ⋆
நீரார் மலர்க் கமலம் கொண்டோர் நெடும் கையால் ⋆
நாராயணா ! ஓ மணிவண்ணா ! நாகணையாய் ⋆
வாராய் ! என் ஆர் இடரை நீக்காய் ‖ **23** ‖

என வெகுண்டு
தீராத சீற்றத்தால் சென்றிரண்டு கூறாக ⋆
ஈரா அதனை இடர் கடிந்தான் எம் பெருமான் ⋆
பேர் ஆயிரம் உடையான் பேய்ப் பெண்டீர் நும் மகளை ⋆
தீரா நோய் செய்தான் என உரைத்தாள் ‖ **24** ‖

சிக்கென மற்று
ஆரானும் அல்லாமை கேட்டெங்கள் அம்மனையும் ⋆
போரார் வேற்கண்ணீர் ! அவனாகில் பூந்துழாய் ⋆
தாராதொழியுமே தன் அடிச்சி அல்லளே ! ⋆
மற்று ஆரானும் அல்லனே என்றொழிந்தாள் ‖ **25** ‖

நான் அவனைக்
காரார் திருமேனி கண்டதுவே காரணமா ⋆
பேராப் பிதற்றாத் திரிதருவன் ‖ **26** ‖

பின்னையும்
ஈராப் புகுதலும் இவ்வுடலைத் தண் வாடை ⋆
சோரா மறுக்கும் வகை அறியேன் ॥ **27** ॥

சூழ் குழலார்
ஆரானும் ஏசுவர் என்னும் அதன் பழியை ⋆
வாராமல் காப்பதற்கு வாளா இருந்தொழிந்தேன் ⋆
வாராய் மட நெஞ்சே ! வந்து ॥ **28** ॥

மணிவண்ணன்
சீரார் திருத் துழாய் மாலை நமக்கருளி ⋆
தாரான் தரும் என்றிரண்டத்தில் ஒன்றதனை ⋆
ஆரானும் ஒன்னாதார் கேளாமே சொன்னக்கால் ⋆
ஆராயும் ஏலும் பணிகேட்டதன்றெனிலும் ⋆
போராதொழியாதே போந்திடு நீ என்றேற்கு ⋆
காரார் கடல் வண்ணன் பின் போன நெஞ்சமும் ⋆
வாராதே என்னை மறந்ததுதான் ॥ **29** ॥

வல்வினையேன்
ஊரார் உகப்பதே ஆயினேன் ॥ **30** ॥

மற்றெனக்கிங்
காராய்வார் இல்லை அழல் வாய் மெழுகு போல் ⋆
நீராய் உருகும் என் ஆவி ॥ **31** ॥

நெடுங் கண்கள்
ஊரார் உறங்கிலும் தாம் உறங்கா ⋆
உத்தமன் தன் பேர் ஆயினவே பிதற்றுவன் ॥ **32** ॥

பின்னையும்
காரார் கடல் போலும் காமத்தர் ஆயினார் ⋆
ஆரே பொல்லாமை அறிவார் அது நிற்க ॥ **33** ॥

ஆரானும் ஆதானும் அல்லள் அவள் காணீர் ⋆
வாரார் வனமுலை வாசவதத்தை என்று ⋆
ஆரானும் சொல்லப் படுவாள் ॥ **34** ॥

அவளும் தன்
பேராயம் எல்லாம் ஒழியப் பெரும் தெருவே ⋆
தாரார் தடந் தோள் தளைக் காலன் பின் போனாள் ⋆
ஊரார் இகழ்ந்திடப் பட்டாளே ॥ **35** ॥

மற்றெனக்கிங்
காரானும் கற்பிப்பார் நாயகரே ⋆
நான் அவனைக் காரார் திருமேனி காணும் அளவும் போய் ⋆
‡ சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே ⋆
மதிட்கச்சி ஊரகமே பேரகமே ⋆
பேரா மருதிறுத்தான் வெள்ளறையே வெஃகாவே ⋆
பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர் ⋆
‡ ஆராமம் சூழ்ந்த அரங்கம் ॥ **36** ॥

கணமங்கை
காரார் மணி நிறக் கண்ணனூர் விண்ணகரம் ⋆
சீரார் கண புரம் சேறை திருவழுந்தூர் ⋆
காரார் குடந்தை கடிகை கடல் மல்லை ⋆
ஏரார் பொழில் சூழ் இடவெந்தை நீர்மலை ⋆
சீராரும் மாலிரும் சோலை திருமோகூர் ॥ **37** ॥

பாரோர் புகழும் வதரி வடமதுரை ⋆
ஊராய எல்லாம் ஒழியாமே நான் அவனை ⋆
ஓர் ஆனை கொம்பொசித்தோர் ஆனை கோள் விடுத்த சீரானை ⋆
செங்கண் நெடியானைத் தேன் துழாய்த் தாரானை ⋆
தாமரை போல் கண்ணானை ॥ **38** ॥

எண் அருஞ்சீர்ப்
பேர் ஆயிரமும் பிதற்றி ॥ **39** ॥

‡ பெரும் தெருவே
ஊரார் இகழிலும் ஊராதொழியேன் நான் ⋆
வாரார் பூம் பெண்ணை மடல் ॥ **40** ॥

ஊராதொழியேன் உலகறிய ஒண் நுதலீர் ! ⋆
சீரார் முலைத் தடங்கள் சேர் அளவும் ⋆
பார் எல்லாம் அன்றோங்கி நின்றளந்தான் நின்ற திருநறையூர் ⋆
மன்றோங்க ஊர்வன் மடல்

சிறிய திருமடல் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்